# தமிழ் இலக்கிய நெறிப் புதுமையாக்கத்தின் முன்னோடி காரைக்கால் அம்மையார்

# Karaikkal Ammaiyar as the Pioneer of Innovation in Tamil Literary Tradition

*ர. பிரேம்குமார்*
முனைவர் பட்ட ஆய்வாளர்
பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்

**R. Premkumar**
*Doctoral Research Scholar*
*PSG College of Arts and Science, Coimbatore*

**Citation**: Premkumar, R. "Karaikkal Ammaiyar as the Pioneer of Innovation in Tamil Literary Trandition." *Journal of Tamil Culture and Literature*, vol. 5, no. 1, 2025, pp. 27-32.

*https://doi.org/10.5281/zenodo.19762151*

## *ஆய்வுச் சுருக்கம்*

*இருபதாம் நூற்றாண்டுத்தொடக்கம் வரை தமிழ் இலக்கியப் பரப்பின் பெரும் பகுதியினைப் பக்தி இலக்கியங்களே நிரப்பியுள்ளன. தமிழில் முகிழ்ந்துள்ள பக்தி இலக்கியங்கள் அளவிற்கு உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை. கி.பி 6ஆம் நூற்றாண்டில் தோன்றிய பக்தி இயக்கமானதுத மிழ்ச் சமூக-சமய வரலாற்றுச் சூழலில் சமயங்களினூடே பரவுதல், சுற்றிச் சூழ்தல், இடைமறித்தல் போன்ற பல மாற்றங்களைச் செய்தது.*

*பக்தி இயக்க காலகட்டத்திற்கு முன்பே அதாவது கி.பி 3-5 ஆம் நூற்றாண்டுவாக்கில் தனக்கெனத் தனியிடத்தைப் பிடித்து இலக்கிய உலகில் கோலோச்சியவர் காரைக்கால் அம்மையார் என்ற புனிதவதியார். இவர் தமிழ் இலக்கியக் கடலில் பல புதுமைகளைப் புகுத்திய புதுமைவதியார். இவர் கையாண்ட இலக்கிய உத்திகளின் மூலம் தமிழிலக்கியம் புத்தாக்கம் பெற்றவிதம் பற்றி இக்கட்டுரை விளக்கியுரைக்கிறது.*

*காரைக்கால் அம்மையார் 143 பாடல்களைத்தமிழ் இலக்கிய உலகிற்கு அளித்துள்ளார்:*

- *அற்புதத்திருவந்தாதி- 101 பாடல்கள்*
- *திரு இரட்டை மணிமாலை - 20 பாடல்கள்*
- *மூத்த திருப்பதிகம் - 22 பாடல்கள்*

## Abstract

*Until the beginning of the 20th century, devotional literature filled a major portion of Tamil literary space. Tamil devotional literature is unparalleled in quantity compared to any other language in the world. The devotional movement that emerged in the 6th century CE brought many changes in the socio-religious historical context of Tamil society, including the spread, circulation, and intervention among religions. During the devotional movement period, Nayanmars and Alwars emerged and enriched both Tamil language and their respective religious traditions. Even before the devotional movement period, around 3rd-5th century CE, Karaikkal Ammaiyar, a holy woman, established her unique place and dominated the literary world. She was an innovator who introduced many novelties into the ocean of Tamil literature. This article explains how Tamil literature gained rejuvenation through the literary techniques she employed.*

*Karaikkal Ammaiyar contributed 143 songs to the Tamil literary world:*

1. *Arputha Thiruandadhi - 101 songs*
2. *Thiru Irattai Manimaalai - 20 songs*
3. *Mootha Thirupathigam - 22 songs*

*She was the first to use the Venba meter in devotional literature, which had been popular in ethical literature. Following her example, the first Alwars, Thirumazhisai Alwar, Nammalwar and others composed devotional hymns in Venba meter.*

**முன்னுரை**

*இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை தமிழ் இலக்கியப் பரப்பின் பெரும் பகுதியினைப் பக்தி இலக்கியங்களே நிரப்பியுள்ளன. தமிழில் முகிழ்ந்துள்ள பக்தி இலக்கியங்கள் அளவிற்கு உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை. ஆங்கு, தமிழ் இலக்கிய ஆய்வில் தடம் பதிக்க முனைவோர் தவிர்க்க இயலாத பகுதி இதுவாகும். கி.பி 6ஆம் நூற்றாண்டில் தோன்றிய பக்தி இயக்கமானது தமிழ்ச் சமூக-சமய வரலாற்றுச் சூழலில் சமயங்களினூடே பரவுதல், சுற்றிச் சூழ்தல், இடைமறித்தல் போன்ற பல மாற்றங்களைச் செய்தது. பக்தி இயக்க காலகட்டத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றித் தமிழையும், தத்தமது சமய நெறிகளையும் செழித்தோங்கச் செய்தனர்.*

*பக்தி இயக்க கால கட்டத்திற்கு முன்பே அதாவது கி.பி 3-5 ஆம் நூற்றாண்டு வாக்கில் தனக்கெனத் தனியிடத்தைப் பிடித்து இலக்கிய உலகில் கோலோச்சியவர் காரைக்கால் அம்மையார் என்ற புனிதவதியார். இவர் தமிழ் இலக்கியக் கடலில் பல புதுமைகளைப் புகுத்திய புதுமைவதியார். இவர் கையாண்ட இலக்கிய உத்திகளின் மூலம் தமிழிலக்கியம் புத்தாக்கம் பெற்ற விதம் பற்றி இக்கட்டுரை விளக்கியுரைக்கிறது.*

**தமிழ் இலக்கியச் சூழலில் பக்தி நெறி**

*தமிழ்மொழியைப் பக்தியின் மொழி என்று குறிப்பிடுவர். அவ்வகையில்,பக்தி என்ற உணர்வு பழங்காலந்தொட்டே தமிழ் இலக்கியச் சூழலில் நிலவி வந்துள்ளது.*

*பக்தி என்ற சொல்லாடலிற்கு நிகண்டுகளும் ,அகராதிகளும் பின்வருமாறு பொருள் பகர்கின்றன.*

*பக்தி,*

- *முறைமை, நீதி, ஒழுக்கம் (மண்டல புருடர், சூடாமணி நிகண்டு, ப.253)*
- *அன்பு,ஆராதனை,ஒழுக்கம் (வீரமாமுனிவர்,சதுரகராதி,ப.145)*
- *நம்பிக்கை, அன்பு ஒழுக்கம் (நா. கதிரைவேற்பிள்ளை, தமிழ் சொல்லகராதி, ப.1435)*

*மேற்கண்ட விளக்கங்களில் இருந்து, மக்கள் தங்களுடைய வாழ்வியல் நெறிகளை ஒழுங்குபடுத்த வகுத்துக் கொண்ட நெறியே பக்தி நெறியாகும் என்ற கருத்துப் புலப்படுகிறது. மதம் ஒடுக்கப்பட்டவர்களின் பெருமூச்சு என்றும், ஆன்மா இல்லாத உலகின் ஆன்மா என்றும் மதம் அடக்குமுறைகளுக்கு எண்ணங்களை வெளியிட ஒரு துணைக் கருவியாகவும் அமைந்திருக்கிறது என்று மார்க்ஸ் கூறுகிறார். (எஸ்.தோத்தாத்ரி, வைணவம் மார்க்சியப் பார்வை,ப.13)*

*மார்க்ஸ் கருத்துப்படி, மதமானது மனிதர்களிடத்து மனிதம் மலர முத்தாய்பாய் விளங்கும் கருவியாக இருந்தமை திண்ணம்.*

*சங்க கால இனக்குழுச் சூழலில் மக்கள் பல்வேறு வகையான சமயங்களைப் பின்பற்றி வாழ்ந்துள்ளனர்.*

*சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் காதலையும் வீரத்தையுமே குறித்துப் பாடுவதனால் அவற்றில் சமயச் செய்திகள் இடம்பெற அவ்வளவு வாய்ப்பில்லை. உவமை காட்டும்போதோ, அல்லது இறைதுதி செய்யும்போதோ தான் அவற்றில் சில சமயச் செய்திகள் குறிப்பிடப்படுகின்றன. அவை பெரும்பாலும் கடவுளரை வருணிப்பதுடன் நிறுத்திக் கொள்கின்றன (மா. இராசமாணிக்கனார், சைவ சமய வளர்ச்சி, ப.1)*

*என்று மா.இராசமாணிக்கனார் கூறும் கருத்து ஈண்டு நோக்கத்தக்கது.*

*சங்கம் மருவிய காலத்தில் சமண-பௌத்தம் போன்ற புறச் சமயங்கள் அரச அதிகாரத்தினால் செல்வாக்கு பெற்று இருந்தன.*

*கி.பி 6 ஆம் நூற்றாண்டில் சமயங்கள் ஒன்றோடு ஒன்று நேரடியாகவும் மறைமுகமாகவும் மோதிக் கொண்டு தங்களுடைய மேலாண்மையை நிறுவ முயன்றன. அதனால், வைதீக, சைவ -வைணவ சமயங்கள் ஒரு அணியாகத் திரண்டு பக்தி இயக்கம் என்ற அமைப்பின் மூலம் புறச் சமயங்களானசமண-பௌத்தத்தை எதிர்த்து வந்தன. சமயப் போர் தீவிரமாக மூண்ட காலகட்டம் அது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்றோரின் பாடல்களில் புரையோடியிருந்த சமய எதிர்நிலைக் கதையாடல்கள் காரைக்கால் அம்மையாரின் பாடல்களில் இல்லாமையால் அம்மையாரது காலகட்டத்தில் சமயக் காழ்ப்புணர்ச்சி நேரிடையாக நிலவவில்லை என்பது கண்கூடு. காரைக்கால் அம்மையார் தம் பாடல்களில் சைவ சமயத்தைப் போற்றியும், பிற சமய நெறிகளை மதித்தும் வந்தமை பாராட்டுதலுக்குரியது.*

**அம்மையாரின் அருள்நெறி**

*சோழ நாட்டில் துறைமுகப் பட்டினமாக விளங்கிய காரைக்கால் என்னும் ஊரில், தனதத்தன்-தர்மவதி இணையருக்கு மகளாகக் காரைக்கால் அம்மையார் அவதரித்தார். பெற்றோர் புனிதவதி எனப் பெயரிட்டு வளர்த்து வந்தனர்.*

***அம்மையாரின் அருட்பிறப்பு பற்றிச் சேக்கிழார்,***

***பால் திரு மடந்தை அவதரித்தாள் என வந்து***

***பொங்கிய பேர் அழகு மிகப் புனிதவதியார் பிறந்தார்***

***(சேக்கிழார், காரைக்கால் அம்மையார் புராணம், பா.2)***

*எனக் குறிப்பிடுகிறார்.*

*சைவ அடியார் ஒருவருக்குத் தன் கணவன் அளித்த மாங்கனியைக் கொடுத்து ஈகை பூண்டார். தெய்வப் பெண் என்று கூறி கணவன் தன்னைப் பிரிந்ததற்காகப் பேயுரு பெற்று இறைவன் திருவடிகளில் அழுது அடியடைந்தார். இறைவன் மீது முதன் முதலாகக் கவி புனைந்த முதல் பெண்பாற் புலவர் என்ற பெரும் பேற்றைப் பெற்றவர் புனிதவதியாரே. இறைவனால் அம்மையே! என்று அழைக்கப் பெற்ற பெருமைக்குரியவர். மேலும், 63 நாயன்மார்களில் காரைக்கால் அம்மையார் ஒருவர் மட்டுமே அமர்ந்த கோலத்தில் காட்சியளிப்பவர்.*

*காரைக்கால் அம்மையார் சங்கமருவிய கால இறுதிப்பகுதியில் வாழந்திருக்கலாம் என தி.வை சதாசிவ பண்டாரத்தார். கே.கே. பிள்ளை, வெள்ளை வரணர் போன்ற அறிஞர்கள் கருதுகின்றனர். எனவே, கி.பி 3 - 5 ம் நூற்றாண்டு காலப்பகுதியில் காரைக்காலம்மையார் வாழந்திருக்கக்கூடும் என்று அவதானிக்கலாம்.*

*ஆதலால், அம்மையார் சைவ அடியார்களில் காலத்தால் மிகவும் முற்பட்டவராக விளங்குகிறார். சைவ அடியாரின் மரபே அம்மையாரிலிருந்துதான் தொடங்குகிறது எனக் கொள்ளலாம்*

**புனிதவதியாரின் இலக்கியப் புதுமை**

*சங்ககாலத்தில் 30க்கும் மேற்பட்ட பெண்பால் புலவர் கவி புனைந்து தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்தனர். அதன் பின்னர், பக்தி இலக்கியக் காலகட்டத்தில் தோன்றிய முதல் பெண்பாற் புலவர் என்ற சிறப்பைப் பெற்றவர் காரைக்கால் அம்மையார். இவர் சைவ அடியார் பலருக்கு முன்னோடியாக இருந்து இறைவன் மீது பா மாலை பொழிந்த பேருடையவர்.*

*இவருக்குப்பின் தோன்றிய சைவ சமயக் குரவர்கள் நால்வரும் எண்ணிக்கை அளவில் அதிகமான பாடல்களைப் பாடி இருந்தாலும், அவர்களுக்குப் பாடும்முறை, பதிக அமைப்பு,*

*கருத்து அமைப்பு, இலக்கிய உத்தி, பண் போன்றவற்றிற்குக் கலங்கரை விளக்கமாக இருந்து வழிகாட்டியவர் இவரே.*

*காரைக்கால் அம்மையார் 143 பாடல்களைத் தமிழ் இலக்கிய உலகிற்கு அளித்துள்ளார். அவை -*

- *அற்புதத் திருவந்தாதி -101 பாடல்கள்*
- *திரு இரட்டை மணிமாலை - 20 பாடல்கள்*
- *மூத்த திருப்பதிகம் - 22 பாடல்கள்*

*அற இலக்கியக் காலத்தில் பின்பெற்ற பெற்ற வெண்பா என்ற யாப்பினை முதன்முதலில் பக்தி இலக்கியத்தில் பயன்படுத்தியவர் இவரே. இவரைப் பின்பற்றியே முதல் ஆழ்வார்களும், திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார் முதலியோரும் வெண்பா யாப்பில் பக்திப் பாசுரங்கள் படைத்துள்ளனர்.*

**திரு இரட்டை மணிமாலை**

*பன்னிரு பாட்டியல் என்ற பாட்டியல் இலக்கண நூலனது இரட்டைமணி மாலையின் இலக்கணத்தைக் குறிப்பிடுகிறது.*

***வெண்பா முதலாகக் கலித்துறை பின்வரும்***
***இந்த இருபதிரட்டை மணிமாலை***

***(பன்னிரு பாட்டியல்,பா.124)***

*வெண்பா, கலித்துறை ஆகிய இரு யாப்பு வடிவங்களையும் முத்தும் பவளமும் போன்று மாலையாகக் கோர்த்து அழகு மிளிரத் தொடுப்பது திருவிரட்டை மணிமாலை.*

*காரைக்கால் அம்மையார் புனைந்துள்ள திரு இரட்டைமணிமாலையில் உள்ள 20 பாடல்களும் கட்டளைக் கலித்துறையும், வெண்பாவும் விரவி அந்தாதியாகப் பாடப்பட்டுள்ளன. இதிலும் காரைக்கால் அம்மையார் ஒரு மாறுதலுடன் முதலில் வெண்பா வராமல் கலித்துறை முதலிலும் வெண்பா அடுத்தும் வருமாறு அமைத்துள்ளார். பிற்காலத்தில் இரட்டைமணிமாலை என்ற பிரபந்த வடிவில் தோன்றிய பல நூல்களுக்குக் காரைக்கால் அம்மையாரின் இருபது பாடல்களுமே ஆணி வேராக அமைந்தமை திண்ணம்.*

**அற்புதத் திரு அந்தாதி**

*அந்தாதி என்பது ஒரு பாடலின் இறுதியை அடுத்தப் பாடலின் முதலாவதாக வைத்துப் பாடும் முறையாகும்.*

*அந்தாதித் தொடை பற்றித் தொல்காப்பியச் செய்யுளியலில் யாதொரு குறிப்பும் இல்லை. ஆயினும் சங்க இலக்கியங்களில் அந்தாதி அமைப்பு காணப்படுகிறது. பதிற்றுப்பத்தின் நான்காம் பத்து முழுவதும் அந்தாதி அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. ஐங்குறுநூற்றில் அம்மூவனார் இயற்றிய நெய்தல் திணையில் தொண்டிப் பத்து முழுவதும் அந்தாதியாக வருகிறது.*

*சங்க இலக்கியங்களைச் சரிவர கற்று அவை ஏற்படுத்திய தாக்கத்தின் விழைவாக, அந்தாதி அமைப்பை பக்தி இலக்கியங்களில் முதன் முதலாகக் கையாண்ட சிறப்பிற்குரியவர் காரைக்கால் அம்மையார். இவரை அடியொற்றி கபில தேவ நாயனார், நக்கீர தேவ நாயனார்,நம்பியாண்டார் நம்பி போன்ற அடியார்கள் அந்தாதி அமைப்பில் பாடல்கள் இயற்றியுள்ளனர்.நம்மாழ்வாரும் திருவாய்மொழியின் ஆயிரம் பாடல்களை அந்தாதித் தொடையில் அமைத்துள்ளார்.*

**மூத்த திருப்பதிகம்**

*திருவாலங்காட்டு இறைவனின் திருநடனத்தைக் கண்டு காரைக்கால் அம்மையார் பாடிய பாடல்கள் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் ஆகும்.*

*பதிகம் என்பது பத்துப் பாடல்கள் கொண்டது. பக்தி இலக்கியங்களில் பதிகம் என்ற அமைப்பிற்குக் காரைக்கால் அம்மையாரே முன்னோடி. ஆதலால் இவர் இயற்றியது "மூத்த திருப்பதிகம்" என்று அழைக்கப்படுகிறது. இவரைப் பின்பற்றியே தேவார மூவர், ஆழ்வார்கள், மாணிக்கவாசகர் போன்றோர் பதிக அமைப்பில் பாடல்களை இயற்றியுள்ளார்கள். இவருக்கு முன் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, திருக்குறள், நாலடியார் போன்ற நூல்கள் பத்துப் பத்துப் பாடல்களைக் கொண்டு விளங்கினாலும் இறையைப் பாடுபொருளாகக் கொண்டு பக்தி நெறியில் பாடப்பட்ட பத்துப் பாடல்களே "பதிகம்" எனப் பெயர் பெற்றுள்ளன.*

**தொகுப்புரை**

1. *தமிழ்ப் பக்தி இலக்கியங்களுக்கு முன்னோடியாகவும், இலக்கியங்களினூடே புத்தொளி பாய்ச்சியவராகவும் அறியப்படுபவர் காரைக்கால் அம்மையார் ஆவார்.*
2. *சைவ அடியார்கள் பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பாடி இறைவனின் திருவடி நீழலில் இன்புறுவதற்கான வித்திட்டவர் அம்மையார்.*
3. *காரைக்கால் அம்மையாருடைய படைப்புகள் அதுவரை தமிழ் இலக்கிய பரப்பு கண்டுணராத புதுமை வாய்ந்தவை.*
4. *திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி, திருப்பதிகம் போன்ற புதிய இலக்கிய உத்தி முறைகளை தமிழ் உலகிற்கு வழங்கி தமிழ் மொழியையும் சைவ நெறியையும் ஒருங்கே வளர்த்த பெருமைக்குரியவர்.*
5. *காரைக்கால் அம்மையார் காலகட்டத்தில் சமயங்களுக்கிடையே காழ்ப்புணர்ச்சி நேரடியாக நிலவவில்லை என்பது அவர்தம் பாடல்கள் வழி கண்கூடு.*
6. *காரைக்கால் அம்மையார் அடியார் என்ற நிலை கடந்து தமிழ்ப் புலவராகத் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்துள்ளார்.*
7. *காரைக்கால் அம்மையார் தமிழ் இலக்கிய உலகில் தனக்கெனத் தனியிடம் பெற்று கோலோச்சியவர் என்பது திண்ணம்.*

**துணைநூற்பட்டியல்**


1. *இராசமாணிக்கனார். மா, சைவ சமய வளர்ச்சி, பூங்கொடி பதிப்பகம், சென்னை,1999*
2. *கலைமணி சிவா, காரைக்கால் அம்மையார் வாழ்வும் வாக்கும், காரனேசன் அச்சகம், புதுவை, 2001*
3. *சுப்புலட்சுமி மோகன். செ, காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை -2010*
4. *தோதாத்ரி, எஸ் வைணவம் மார்க்சியப் பார்வை, நியூ சென்சுரி புத்தக நிலையம், சென்னை - 2010*
5. *நடராசன். தி. சு, தமிழ்நாட்டில் வைதீக சமயம் வரலாறும், வக்கனைகளும், நியூ சென்சுரி புத்தக நிலையம், சென்னை - 2014*
6. *நடராசன். பி.ரா, பெரியபுராணம் மூலமும் உரையும்,உமா பதிப்பகம், சென்னை-2017*
7. *வசந்தகுமார் (ப. ஆ), பதினோராம் திருமுறை, கற்பகம் பல்கலைக்கழகம், கோவை, 2016*

**References**


1. Rasamanickkanar, Ma. Shaiva Samaya Valarchi (Development of Shaivism), Poongkodi Publications, Chennai, 1999.
2. Kalamaṇi Shiva. Karaikkal Ammaiyar Vazhvum Vaakkum (Life and Words of Karaikkal Ammaiyar), Karanaesan Press, Puducherry, 2001.
3. Suppulakshmi Mohan, Se. Karaikkal Ammaiyar Paadalgal Oru Aayvu (A Study of Karaikkal Ammaiyar's Songs), World Tamil Research Institute, Chennai, 2010.
4. Thothaathri, S. Vainavam Marxiya Parvai (Vaishnavism: A Marxist Perspective), New Century Book House, Chennai, 2010.
5. Nadarasan, Thi. Su. Tamilnaattil Vaidheega Samayam Varalarum Vakkanigalum (Vedic Religion in Tamil Nadu: History and Arguments), New Century Book House, Chennai, 2014.
6. Nadarasan, P. Ra. Periyapuranam Moolamum Uraiyum (Periyapuranam: Text and Commentary), Uma Publications, Chennai, 2017.
7. Vasanthakumar (Ed.). Pathinoraam Thirumurai (Eleventh Thirumurai), Karpagam University, Coimbatore, 2016.